அனைத்துலகத் தமிழ்க் கல்வி பண்பாடு அறிவியல் மேம்பாட்டு இணையம்
International Tamil Education Cultural Scientific Development Federation

# அரையாண்டுத்தேர்வு 2015-2016

## தமிழ்மொழி
## வளர்நிலை 2

பெயர்: ______________________________

நேரம்: 90 நிமிடங்கள்
மொத்தப்புள்ளிகள்: 100

## 1) மிகப் பொருத்தமானதைத் தெரிந்து, கீறிட்ட இடத்தில் எழுதுக!

எ-கா: கதிரவனுக்கு நன்றி கூறும் திருநாள் <u>தைப்பொங்கல்.</u>
(நத்தார்விழா, தைப்பொங்கல், ஆடிப்பிறப்பு)

1. தமிழர் ______________________________ பேசுவர்.
(தமிழ், ஆங்கிலம், டச்சு)

2. ______________________________ புல் மேய்கின்றன.
(கோழிகள், பன்றிகள், மாடுகள்)

3. மகிழ்ச்சியைத் தரும் கலைகள் ______________________________ ஆகும்.
(வீரக்கலைகள், இன்கலைகள், சமையற்கலைகள்)

4. குரங்கு தாவியது. குரங்குகள் ______________________________.
(தாவின, தாவியன, தாவினார்கள்)

5. நேற்று சனிக்கிழமை. இன்று ______________________________.
(வெள்ளிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை, திங்கட்கிழமை)

6. அது ஒரு நூலகம். ______________________________ பல நூல்கள் உள்ளன.
(இங்கே, எங்கே, அங்கே)

7. பறவைகளின் ______________________________ கேட்டன.
(ஒளிகள், ஒலிகள், ஒழிகள்)

8. உயிர்களிடத்தில் ______________________________ இருப்போம்.
(அன்பாக, கோபமாக, வெறுப்பாக)

9. நாம் ______________________________ கேட்கின்றோம்.
(வாயால், காதால், மூக்கால் )

10. இனியன் ஓவியம் ______________________________.
(வரைகின்றான், பாடுகின்றான், வாசிக்கின்றான்)

(10 புள்ளிகள்)

## 2) சொற்றொடர்களைப் பொருத்தமாக இணைக்கவும்!

| | |
|---|---|
| எ-கா: திருவள்ளுவர் ○ | ○ உயரமாக வளரும். |
| 1. பனைமரம் ○ | ○ உண்கின்றான். |
| 2. மிளகாய் ○ | ○ நீரில் வாழும். |
| 3. மீன் ○ | ○ மதிப்போம். |
| 4. தம்பி பிட்டு ○ | ○ திருக்குறளை எழுதினார். |
| 5. பெரியோரை ○ | ○ உறைக்கும். |

(5 புள்ளிகள்)

## 3) கீறிட்ட இடங்களில் விடுபட்ட எழுத்தை எழுதுக!

| | |
|---|---|
| எ-கா: தே_நீ_ர் | ( னீ, நீ ) |
| 1. மகி_____ச்சி | ( ள், ழ் ) |
| 2. ந_____றி | ( ண், ன் ) |
| 3. வி_____யாட்டு | ( ழை, ளை ) |
| 4. நூ_____ | ( ல், ள் ) |
| 5. சி_____மி | ( ரு, று ) |

(5 புள்ளிகள்)

## 4) படத்தைப் பார்த்து, வாக்கியங்களை நிறைவு செய்க!

எ-கா:



அக்கா உணவு சமைக்கின்றாள்.



பூனை நூற்பந்து ____________________ .



குருவி தேன் ____________________.



குன்றன் மணலில் வீடு ____________________.



சிறுவர்கள் பூங்காவில்

________________________________.



சிறுவன் பனியில்

__________________________.

(10 புள்ளிகள்)

5) கீழே உள்ள சொற்களில் மிகப் பொருத்தமானதைத் தெரிந்து, கீறிட்ட இடங்களில் எழுதுக!

(கீழே / மாலையில் / சிலர் / ~~இரவில்~~ / துன்பம் / கடைசியில்)

எ-கா: பகலில் கதிரவனைக் காணலாம்.
இரவில் நிலாவைக் காணலாம்.

1. விளையாட்டுகள் முதலில் நடைபெற்றன.
   பரிசில்கள் ______________________ வழங்கப்பட்டன.

2. மரத்தின் மேலே பூனை இருக்கின்றது.
   மரத்தின் ______________________________ நாய் இருக்கின்றது.

3. பூங்காவில் பலர் இருக்கின்றனர்.
   அவர்களில் ___________________________ பெரியவர்கள்.

4. நல்லவர்களின் நட்பு இன்பம் தரும்.
   தீயவர்களின் நட்பு ____________________________ தரும்.

5. காலையில் படிப்போம்.
   _____________________________ விளையாடுவோம்.

(10 புள்ளிகள்)

6) கீழேயுள்ள பந்தியைப் படித்துத் தரப்பட்டிருக்கும் சொற்களில் மிகப் பொருத்தமானதைத் தெரிந்து, கீறிட்ட இடங்களில் எழுதுக!

எ-கா:
எனக்கு ஏழு வயது. எனது பெற்றோருக்கு நான் செல்லப்பிள்ளை. எனது பிறந்தநாளுக்கு அப்பா ஒரு பூனை வாங்கித் தந்தார். அதன் நிறம் ________________. அதன் கண்கள் ________________ இருக்கும். நான் அதற்கு வள்ளி என்று ________________ வைத்திருக்கிறேன். பள்ளியால் வந்தவுடன் அதற்குப் பால் ________________. பாலைக் குடித்து முடித்ததும், நாவால் வாயை நக்கும். மகிழ்ச்சியால் மியா என்று ________________. அதைப் பார்க்க எனக்கு ஆசையாக இருக்கும்.

| | | |
|---|---|---|
| அழகாக | கத்தும் | ~~செல்லப்பிள்ளை~~ |
| வெள்ளை | பெயர் | வைப்பேன் |

(10 புள்ளிகள்)

7) உறுப்பமைய எழுதுக!

1. நல்ல நூல்களைத் தேடிக் கற்போம்.

________________________________

2. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.

________________________________

(5 புள்ளிகள்)

## 8) கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு ஒரு சொல்லில் விடை தருக!

எ-கா: சங்கவி வீணை மீட்டுகின்றாள்.
வீணை மீட்டுவது யார் ?
சங்கவி

1. நல்லவர்களோடு சேர்ந்து வாழ வேண்டும்.
   யாரோடு சேர்ந்து வாழ வேண்டும்?

   ______________________________

2. பாட்டி குடுகுடு என நடக்கின்றார்.
   பாட்டி எப்படி நடக்கின்றார்?

   ______________________________

3. பறவைகள் வானத்தில் பறக்கின்றன.
   பறவைகள் எங்கே பறக்கின்றன?

   ______________________________

4. அம்மா முற்றத்தில் கோலம் போட்டார்.
   அம்மா முற்றத்தில் என்ன போட்டார்?

   ______________________________

5. பேருந்து வேகமாக வந்தது.
   வேகமாக வந்தது எது?

   ______________________________

(10 புள்ளிகள்)

9) படத்தைப் பார்த்துச் சரியாயின் (✓) என்றும், பிழையாயின் (✗) என்றும் அடையாளம் இடுக!



எ-கா: இது ஒரு கோடைகாலம். ☑

1. சிறுவன் ஒருவன் வேகமாக ஓடுகின்றான். ☐
2. சிறுவன் பூனையைக் கூட்டிச் செல்கின்றான். ☐
3. வானில் விண்ணுந்து பறக்கின்றது. ☐
4. தூரத்தில் கடல் தெரிகின்றது. ☐
5. பூக்கள் பூத்திருக்கின்றன. ☐

(10 புள்ளிகள்)

10) படத்தைப் பார்த்து, மூன்று வாக்கியங்கள் எழுதுக!



(15 புள்ளிகள்)

11) மாறி இருக்கும் சொற்களை ஒழுங்குபடுத்தி, கருத்துள்ள வாக்கியமாக எழுதுக!

எ-கா: கிடைத்தது / அஞ்சல் / உங்கள்
உங்கள் அஞ்சல் கிடைத்தது.

1. பாடம் / படித்தேன் / நான்

______________________________

2. யானை / விலங்கு / ஒரு / காட்டு

______________________________

3. மயக்கம் / அடைந்தார் / முதியவர்

______________________________

4. கலைகள் / போக்கும் / கவலையைப்

______________________________

5. பெரியவர் / கேட்க / சொல்லைக் / வேண்டும்

______________________________

(10 புள்ளிகள்)